## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2018

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும். இச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய அமைப்புக்கள் அனைத்தும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரகாரம், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அவற்றின் வருடாந்த செயலாற்று அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலத்திற்குள் தயாரிக்கப்படுவதற்கு அத்தாட்சிப்படுத்துவதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்பட வேண்டிய அமைப்பிற்கு உரித்தான வருடாந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பு வாய்ந்தவர் ஆவார். எனினும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்அறிக்கைத் திகதி வரையில் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் சட்டத்தின் 39(1) ஆம் உப பிரிவு | அமைச்சரினால் முதுமாணிக் கல்வி நடவடிக்கைகளுக்கான சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முதுமாணிக் கல்வி நடவடிக்கைகளுக்கான சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் முதுமாணிக் கல்வி நடவடிக்கை களுக்கான சபை ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டுமாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. | தற்போது நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல் வேண்டும். |
| (iii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த பதிவேட்டைப் பேணுவதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | 1999 ஒக்தோபர் 8 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1.3.1(iii) ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் சிரேஷ்ட தகுதிநிலைப் பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்காக குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட முடியுமாயினும் நிறுவகத்தின் குழுப் போக்குவரத்து வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாகப் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.5 ஆம் பிரிவு | தொழிற்படு மூலதனத்தைச் செயற்திறனுடையதாகப் பேணுவதற்காக கடன்பட்டோருக்கான மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, இருப்புகளுக்கான காலப்பகுப்பாய்வு, பழைய நாட்கடந்த மற்றும் மெதுவாக நகரும் சொத்துக்களுக்கான மற்றும் ஏனைய உருப்படிகளுக்கான கூற்றுக்கள் மாதாந்தம் பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னால் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(vi) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

-------------------------

| | | | |
|---|---|---|---|
| • நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உப கட்டுநிதி யாதாயினும் விசேட காரணங்களுக்காக வழங்கப்படும் போது ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 வரையான அதிகூடிய தொகை மட்டுமே முடியுமாயினும் இதற்கு முரணாக 24 சந்தர்ப்பங்களில் அதற்கும் அதிகமான தொகையானது முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முற்பணத் தொகை எல்லையை விஞ்சுவது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டு அதன்பின் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| • நிதிப்பிரமாணம் 371(5) | உப கட்டுநிதியானது குறிப்பிட்ட விசேட கருமத்திற்கு உத்தியோகத்தரினால் பெறப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தரினால் அக்கருமம் நிறைவடைந்த 10 நாட்களுக்குள் மீண்டும் கட்டுநிதி தீர்க்கப்படுதல் வேண்டும். ஆயினும், 21 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 5,000 இலிருந்து ரூபா 200,000 வரையான வீச்சிலான உப கட்டுநிதிகள் தீர்க்கப்படுவதற்காக 5 நாட்கள் தொடக்கம் 213 நாட்கள் வரையான காலப்பகுதி எடுக்கப்பட்டள்ளது. முற்பணம் வழங்கப்படும் போது அம்முற்பணத் தொகை பெறப்பட்ட நிதியாண்டின் இறுதித் திகதிக்கு முன்னர் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், 6 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்தம் | எதிர்காலத்தில் இந்நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்த்துவைக்கப்படாத இடைக்காலக் கட்டுநிதிகள் பெற்ற உத்தியோகத்தர்கள் மீது மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 403,000 ஆன முற்பணம் சம்பந்தமாக அந்நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| • நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்பீடு செய்யப்பட்டு அதற்கான அறிக்கையானது கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை முன்னால் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவச் செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் வருடத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 4 செயற்பாடுகளுக்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பினும் ஆனால் வருடத்திற்குள் அவை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. அத்துடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட 9 செயற்பாடுகளுக்காக வருடத்தினுள் 50 சதவீதத்திற்கும் குறைவான தொகையே பயன்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது இக்குறைபாடுகள் ஏற்படாது இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சுற்றுலாத்துறை வளங்களை மேம்படுத்தல் செயற்திட்டத்தினால் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு தேசிய தொழிற் தகைமை (NVQ), பெறப்படுவதற்கான மதியுரை மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகம் இற்றை வரையில் தேசிய தொழிற் தகைமையுடன் கூடிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேசிய தொழிற்தகைமை பெற்றுக்கொள்ளும் பொருட்டு தேவையான ஆவணங்கள் தயாரித்தல் இறுதி நிலையினை அடைந்துள்ளது. எதிர்வரும் வருடங்களில் இந்நோக்கத்தை எய்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேசிய தொழிற் தகைமையை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையில் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாது இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் உள்ளக பூச்சாடிக்ளைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 ஆம் வருடத்தின் மே மாதம் தொடக்கம் 2019 செப்தெம்பர் மாதம் வரையில் ரூபா 2,049,350 ஆன தொகையொன்று செலவிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாக அறிவிக்கப் பட்டமையால் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (iv) | நிறுவகத்தின் பெயரில் உபயோகிக்கப்பட்ட வாகனம் ஒன்றின் உரிமையை சட்டரீதியாக கையேற்பதற்கான நடவடிக்கை நிறுவகத்தினால் எடுக்கப்படவில்லை. | வாகனத்தை உரிமை மாற்றல் சம்பந்தமாக நிதி அமைச்சின் அறிவுரைகளைப் பெற வேண்டியுள்ளமை. | வாகனத்தின் சட்டரீதியான உரிமை கையேற்கப்படல் வேண்டும். |

**(இ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுத்திரா ஹோட்டலில் வருடத்தினுள் வருமானம் பெறுவதற்காக ஹோட்டல் அறைகள் இரவு (Room Nights) 3285 பேணப்பட்டு வருவதுடன் அவற்றில் நிறுவகத்திற்கு வருமானம் பெறுவதற்காக உபயோகிக்கப்பட்ட ஹோட்டல் அறைகள் இரவு 762 என்பதுடன் அது 23 சதவீதம் மட்டுமே ஆகும். | எதிர்காலத்தில் சமுத்திரா ஹோட்டலின் வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளரைக் கவர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஈ) மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 217 என்பதுடன் உள்ளபடியான பதவியணியினர் 193 ஆகும். இதன் பிரகாரம் பதவியணியினரில் 24 ஆன வெற்றிட எண்ணிக்கைகள் அவதானிக்கப்பட்டது. | செய்திப்பத்திரிகை மற்றும் எழுத்து மூலமான பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் பல தகுதி நிலைகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (உ) வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தினால் 2014 ஆம் வருடத்திலிருந்து வருடாந்த அறிக்கைகள் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |